ஓம் பரப்பிரமணே நம:

மிகப் புதியது { **சமரஸம்** } மிகப் பழையது

சமரசச் செல்வி } ஜுலை & ஆகஸ்டு 1936 { Vol. 1 Book 4

கடவுளைக் காணும் வழி.

மனிதரால் உலகத்தில் அடையப்பெறும் இன்ப நுகர்ச்சிகள் பல உண்டு. அவற்றுள் சுவையுள்ள உணவுப் பதார்த்தங்களை அருந்தலே முதன்மையென்னலாம். ஒருவருடைய இன்ப நுகர்ச்சிக்காக பன்னூற்றவர் உழைக்கவேண்டி இருக்கின்றனர்.

காய்கறி பதார்த்தங்கள் பழம் முதலியவைகளை விற்று வந்தால் நமக்கு ஒரு அணா அல்லது அரையணா கிடைக்காதா வெனக்கருதி நாள்முழுதும் தெருத்தெருவாய் அலைந்து விற்கும் ஏழைகளுக்கு பெருந்தன்மையாக காசு கொடுத்து பதார்த்தங்களை வாங்காமல் விலையைக்குறைப்பதும் கொசுர் பேசுவதும் ஏமாற்றுவதும் ஜீவகாருண்யமாகுமா? தினம் ஒரு அணாகூட வருமானமில்லாமலும் அன்றாடம் கஞ்சிக்கு மூட்டை தூக்கி செல்லும் ஏழைகளுக்கு சுமைவரி போடலாமா? அந்தோ பரிதாபம்! இதுதான் நம்நாட்டு வழக்கமா? மேனாட்டாரிடம் இக்குணம் சிறிதும் இல்லையே! ஏழை தொழிலாளிகளுடைய நிலைமையை விசாரிக்காமல் அவர்களுக்கு தொழில்வரி போடுவது பிச்சைக்காரர்களை அதிகப்படுத்துவதும் கொடுமுடி செய்கிறவர்களுக்கு ஊக்கமூட்டுவதுமாகும்.

கடவுள் ஒவ்வொரு உயிர்களிலும் நிறைந்திருக்கிறார் என்பது உண்மையானால் ஏழைகளுக்கு செய்யும் உதவி கடவுளுக்கு செய்யும் அபிஷேகம். தொழிலாளிகளுக்கிரங்குவது கடவுளைபூஜிப்பதாகும். தொழிலாளிகளின் ஜீவனோபாயத்தையும் அவர்கள் நிலைமையையும் ஆராய்ந்து நன்மை செய்வதே கடவுளைக் காண முயலும் வழியாகும்.

சமரஸம்.

வெளியுலகத்தில் நாம் பார்க்கும் எண்ணிறந்த வஸ்துக்க ளெல்லாம் நமது பார்வைக்கு ஒன்றைவிட ஒன்று பெரிதாகவும் சிறியதாகவும் குணவேறுபட்டதென்றும் தோன்றுகின்றதோடு அதன் பரிணாமத்திலும் சக்தியிலும் ஏற்றத்தாழ்வாக மாறுபட்டி ருக்கின்றன. அப்படி அவைகள் மாறுபட்ட உருவங்களோடும் மாறுபட்ட உபயோகங்களோடும் காணப்படினும் அவையனைத் தும் அவைகளைக்கைக்கருவியாக உபயோகிக்கும் ஒருவனது ஒரே நோக்கத்தையே பூர்த்தி செய்வதில் சமபங்கு எடுத்துக்கொண்டு இருக்கின்றன. உதாரணமாக எறும்பும் குருவியும் யானையும் குறிப்பிட்ட ஒரே வேலையை செய்ய இயலாத நிலைமை ஏற்பட்டு இருப்பது வெளிப்படை. எறும்பு செய்துவரும் நுட்பமான சுத்தி வேலைகளை யானை செய்ய இயலாது! குருவியும் செய்ய இயலாது. குருவிகள், குயில்கள், மயில்கள் செய்யும் இன்பரசுகான ஓசையும் அவைகள் செய்யும் நடனகாக்ஷியும் அவைகளுக்கு ஆண்டவன் அளித்திருக்கும் இயற்கையழகுவாய்ந்த கம்பீர சிறகுகளால் அமைந்த போர்வையும் அவைகள் ஆகாயத்தில் ஊசலாடி வட்டமிட்டு பறந்து விளையாடும் கோலங்களையும் யானைகள் செய்ய இயலுமா? இயலாதே. யானையின் பலமும் அதன் வேலைகளும் அதன் அறிவும் அதன் பயங்கர தோற்றமும் மற்றெந்த பிராணி களுக்கும் ஒரு நாளும் வராது.

இதைப்போல் மக்களினத்தில் உருவத்திலும் பாஷையி லும் தொழின்முறையிலும் பற்பல பணியியற்றி வந்தாலும் அவர்கள் ஆண்டவனின் ஒரே நோக்கமான சங்கல்பத்தை நிறைவேற்றி வருகிறார்கள். இவைகளால் எவ்வுயிரும் சிருஷ்டி கர்த்தாவின் முன்னிலையில் சமரஸ தோற்றத்தில் வைக்கப்பட்டு உள்ளனவென்பதை மனுக்கோடிகள் உண்ணி நடத்தல் வேண்டும். சாமர்த்தியத்திலும் அவைகள் ஒன்றிற்கொன்று தோற்றவையல்ல. எறும்பை யானை இலேசாக நசுக்கிவிடும். ஆனால் காதில் புகுந்தாலோ மரணத்தை உண்டுபண்ணுகிறது. பக்ஷிகளும் பல பிராணிகளை குத்தி கொன்றுவிடும். பூனைபோன்ற பல பிராணிகளும் பக்ஷிகளை கொன்றுவிடும். இதனால் ஒருவருக்

கொருவர் ஒவ்வொரு விஷயத்தில் சமர்த்தராகவே இருக்கிறார்கள் ஆகிலும் அவைகள் சமரஸமாகவே உலகில் வாழ்கின்றன மனிதனே?

சமரசம்.

எல்லார்க்கும் பரமசிவன் துணையாமாகில்
எவ்வுயிர்க்கு மவனருள் சேர்ந்திருக்குமன்றே!
பொல்லார்க்கு மறிவுகெட புரிந்திடாமல்
பொறிவழியே மனம் பொருந்தி சுழன்றிடாமல்
நல்லோர்க்கும் பெரியோர்க்கும் எளியோர்க்கும்
நாடோறு மிரக்க முண்டாய் நடப்பாயாகில்
பல்லோர்க்கு முயிர்க் குயிராய் நிறையுமெங்கோன்
பரிவினொடு கருணையருள் பாலிப்பானே.

பத்திரிகை வாசிப்பதன் அவசியம்.

பாரமார்த்திகமும், லௌகீகமும்.

லௌகீகபாவப்படி இந்த உலகமானது ஓர் பெரிய யந்திரமாகவும் அதன் சேதன அசேதன சக்திகளே உலகவாழ்க்கைக்கு புத்தியற்றவிதமான காரணங்களுக்கு காரணமாயும் காணப்படுகின்றன. ஆகாயத்தில் காணப்படும் பெரியனவும் சிறியனவாகிய கிரகங்களும் நக்ஷத்திரங்களும் தனியாக சுழன்று ஏதோ வேடிக்கையார்த்தமாக சில காரியங்களை செய்துகொண்டிருப்பதாகவும் காணப்படுகின்றன. அப்படியே பஞ்ச பூதங்களும் உலகின் அசேதன சேதன சக்திகளும் சூழ்ந்து தனியான ஓர் ஏகாக்கிரக சக்திமுறையை ஏகாந்த நிலையில் செய்துகொண்டு வருவதாகவும் தோன்றப்பட்டு வருகின்றது. இந்த உலகத்தில் மட்டுமல்ல மற்றெல்லா உலகத்திலுள்ள ஒவ்வொரு ஜீவர்களும் பொருள்களும் அதனதன் சக்திக்கும் புத்திக்கும் இயற்கைக்கு ஏற்றவாறு எண்ணிறந்த பலப்பல காரியங்களை செய்துக்கொண்டு இருப்பதாகவும் தோன்றுகின்றன.

உள்ளம் அப்படித்தானாவென்று சற்று கூர்ந்து கவனிக்குமிடத்து அந்தஎண்ணங்கள் முற்றிலும் மாறானதென புலனாகின்றன இந்த உலகத்தைப்போலவே பல உலகத்திலும் பலவித சக்தி வாய்ந்த ஜீவர்கள் வசித்து வருகிறார்கள். இந்த உலகத்துக்கும் மற்ற உலகத்துக்கும் நெருங்கிய சம்மந்தமிருப்பதாகவும் சகாயத்துவம் கொண்டதாகவும் கருதப்பட்டு வருகின்றது. இந்த உலகத்தில் ஏற்படும் சீதோஷ்ண நிலமைகள் வெள்ளம், மழை, பூகம்பம், புயல் முதலியனவும் மற்றும் உயிர்களுக்கு வேண்டிய க்ஷேமலாபங்களும் மற்ற உலகத்தின் சம்பந்தத்தாலும் பரிவட்ட ஆகர்ண சக்தியாலுமென்பது ஆராயக்கிடக்கின்றன. அப்படியே நமது கண்ணுக்குபுலப்பட்டும் புலப்படாமலுமிருக்கிற ஜீவகோடிகள் ஒன்றிற்கொன்று நெருங்கி உழைத்து உலகுக்கு பலவித சாதகபாதகங்களை உண்டுபண்ணுகின்றன. இப்படிப்பட்ட சக்திகள்தான் ஒன்றுகூடி இவ்வுலகத்தின் நிகழ்ச்சிகளை ஆரம்பிக்கின்றன. இதன் வேகத்தால் மானுஷ்ய நிர்மானுஷ்ய பிராணிகளும் ஒன்றிற்கொன்று கலந்தும் ஒன்றின் உதவியால் மற்றொன்று மேலேறுவதும் இறங்குவதும், ஜீவாதார உரிமையும் ஏற்படுகின்றன. மனிதர்களும் அவ்வாறே அவரவர்கள் யதேச்சைபடி தங்கள்சக்தியாலும் அறிவு ஆற்றலாலும் தூண்டப்பட்டு உலககாரியங்களை பூர்த்தி செய்வதாக காணப்பட்டாலும் உண்மையில் அவர்கள் சக்திகளைக்காட்டிலும் உயர்ந்த அனுபோகம்வாய்ந்த பல அறிவாளிகளின் கைக்கருவியாக இருக்கின்றனர். எப்படி ஓர் நாடகமேடையில் பலவித வேஷதாரிகள் பற்பல வேஷங்களைப்போட்டு அதற்கு தக்கவாறு நடித்து காட்டியபோதிலும், அவரவற்கு தக்கபடி பாடமைப்பும் கால அளவு சௌக்கியம் முதலியவைகளை தயாரித்துக் கொடுக்கும் காரணபுருஷன் ஒருவன் அந்தரங்கத்திலிருந்து வருகிறானோ அப்படியே இந்த உலககாரியங்களை மேல் சீர்தூக்கி யோசனைகூறும் புத்திமான்கள் உண்டென்பதை சிலர் எண்ணுவதே கிடையாது. இம்மாதிரி மானவகதியை சீர்தூக்கி அவர்களுக்காக உழைக்கும் சக்திமான்கள் பலவகைப்பட்டிருக்கின்றனர். சிலர் கலைகளிலும், சிலர் சிற்பங்களிலும், சிலர் ஞானங்களிலும், சிலர் தொழில் நீதிகளிலும், விஞ்ஞான ஆராய்ச்சிகளிலும் சிந்தை செலுத்தி உயிர்களுக்கு சேவை

செய்து வருகிறார்கள். இவர்கள் செய்யும் ஆராய்ச்சி இவர்களு டைய தனிப்பட்ட அறிவையும் இக்காலத்து அனு பவத்தையுமட்டும் கொண்டதாயிராமல் ஆதிகாலந்தொட்டு மக்கள் கட்டிக்கொண்டு வந்திருக்கும் ஓர் பிர்ம்மாண்டமான கட்டிடத் தின் ஓர் சிறிய பாகத்தைமட்டும் பழுது பார்க்கிறவர்களாயிருக் கிறார்கள். அப்படிப்பட்ட (ஆண்டவனின்) உயிர்களின் திருப் பணிகள் விஷயத்தில் பல்லாயிரக்கணக்காக பேருயிர்கள் தொண்டு செய்து வருகின்றன.

அப்படிப்பட்ட தொண்டை பல்லாண்டுகளாக சிந்தை செய்து சிரமேற்றாங்கி யூகிக்கக்கிடக்கும் பலவழிகளில் ஓர் வழி யைப்பற்றி பத்திரிகை மூல்யமாய் மக்களுக்கு தொண்டுசெய்யும் உயர்பணியை இச்சமரசச் செல்வி தாங்கி வேலைசெய்து வருகின் றது. தவிர தற்காலத்து மக்களுக்குள் பெருகிவரும் நவீன நாக ரீக முயற்சியால் மனுக்குலத்தார்க்கு என்னென்ன தீங்குகள் நேரிடுகிறதென்பதையும் கூடியவரையில் பொருளாதார முறையும் தொழில் முறைகளையும் பாகித்து உயிர்களுக்கு உதவவேண்டியே சுமார் 20 வருஷமாக பத்திரிகை வாயிலாகவும், உபதேச வாயி லாகவும் பெருந்தொண்டு செய்திருப்பதல்லாமல் இனியும் செய்ய முன்வந்திருக்கின்றது. அன்பர்கள் இவ்விஷயத்தில் மேனாட்டா ரின் உயர்நோக்கை கவனித்து மனித சமுகத்தில் ஒற்றுமை நிலை நாட்டும் பத்திரிகை சாதனத்தை அன்னார் ஆதரிப்பதுபோல் பொருளுதவி செய்து ஆதரித்து வருவீர்களாகில் நம்மில் சகோதர வாஞ்சை பெருகி நம்மை பீடித்துள்ள தரித்திரம், பேராசை, சுய நலம் அன்னும் சண்டமாருதத்தால் வெருட்டி யடிக்கப் பட்டு சதானந்தத்தை யடையக்கூடும்.

ஒரு மனிதனுடைய நாகரீக வாழ்க்கையை பலருடைய உழைப்பும், பலருடைய நட்பும், பலருடைய அனுபவங்களும், பலருடைய உடல், பொருள், ஆவியின் நஷ்டங்களும் சேர்ந்தே பலப்படுத்தவேண்டியிருக்கிறது. இவைகளை யறிந்து எல்லா உயிர்க்கும் ஹிதம் செய்ய நினைக்கிறவனே அறிவாளி என்னப் படுவான்.

சாமி பலி கேட்குதா? நாக்கு ருசி பார்க்கிறதா?

சேவல், ஆடு, மாடு, பன்றி முதலியவைகளை கடவுள் படைத்ததின் நோக்கம் அவைகள் மனித சமூகத்துக்கு பல விதங்களில் நன்மையும் இனிமையும் பெற்று மகிழுமாறே.

சேவல் மனிதன் உழைப்பினால் அயர்ந்து நித்திரை செய்பவன் காலையில் எழுந்து தன் வேலைக்கு எவ்வாறு புறப்பட முடியும்? அதைதான் சேவல் செய்கிறது. அதிகாலையில் எழுந்து ஆதித்தன் என்னும் அரசன் வருகையை காட்டும் கட்டியக் காரனைப்போல் பொழுது புலர்வதற்கு முன்னரே மக்களை உறக்கத்தினின்று எழுப்பும் காலதூதனாகும். வீடுகளைச் சுற்றி உண்டாகும் அசுசிகளை சுத்திசெய்யும் தோட்டியாகவும் வேலை செய்கிறது. அதோடு பலவகைப்பட்ட அழகோடு விளங்கும் சிறகுகளைவிரித்து நடனம்செய்து மக்களுக்குசந்துஷ்டியளிக்கிறது

ஆட்டின் பால், மயிர், தோல், கொம்பு, புழுக்கை பலவி தத்தில் உபயோகப்படுத்துகிறோம். மாடும் அவ்வாறு உபயோகப் படுவதைவிட வண்டி இழுக்கவும் எருழவும் உபயோகப்படுத்து கிறோமல்லவா! பன்றி தோட்டிகள்போல் மலங்களை சுத்தி செய்வதோடு புலங்களிலுள்ள கோரைக்கிழங்குகளை தோண்டி எடுத்து உழவர்களுக்கு விசேஷ நன்மை புரிகிறது. இப்படி பல வழிகளிலும் நமக்கு நன்மைபுரியும் மிருகங்களை நாக்கு ருசி கொண்டு சாமிப்பெயரைச்சொல்லி பலியிடலாமா?

மனிதன் கூடியவரையில் புலால் உண்ணாமலிருக்க முயலுவதே உத்தமமானதும் பொன் விதியுமாகும். 2-வது போதுமான நல்லுணவு கிடைக்கப்பெறுதமாந்தர் அவ்வாறு உண்ணல் மத்திபமும் வெள்ளி விதியுமாகும். மனிதன் நாக்கு ருசி கொண்டு ஜனங்களை ஏமாற்றி தின்பதல்லாமல் சாமியின் பேரில் பழியை சுமத்தி பிடுங்கித்தின்பது அதமமும் இரும்பு விதியையும் ஒக்கும்.

சி. சாமிக்கண்ணு.
ஜீவரக்ஷாபிரசாரசபை காரியதரிசி,
திண்டிவனம்,

முத்துமாலை.

1 உனக்குள் நீயே உத்தமனாய் இருக்க ஆசைப்படு பஞ்சேந்திரியங்களையும் அடக்கு. உன் எல்லா அவயவங்களுக்கும் நீதியை வழங்கு. உன் அவயவங்கள் உனக்கு தீமை விளைவிக்குமாகில் தண்டிக்க தாமதியாதே சிறு பிராயமுதலே உன் அவயவங்களை ஒழுங்காகவும் கட்டுப்பட்டதாகவும் வளர்த்துவா. நற்சுவை நற்கந்தம் நற்கேள்வி நற்சங்கம் தூயதிருஷ்டி இவைகளே நீதிமானின் ஊழியர்கள்.

2 உன் குடும்பத்திலும் நீதியாய் நட. அவர்கள் அனைவருக்கும் உன் நீதியை வழங்கு. அவர்களை தங்களுக்கும் பிறர்க்கும் தீங்குசெய்ய விடாதே. நீதியின் உயர்வை அவர்களும் புசித்து மற்றவர்களுக்கும் கொடுக்க அவர்களைப்பழக்கு. ஓரிமின்மை, பகிர்ந்துண்ணல், தவறு உணர்தல், அடங்கி நடத்தல் இவைகள் உயர் குடியின் அங்கங்களாகும்.

3 அனைவரிடத்தும் நீதிமானாய் நட. அவர்களுக்கும் உன் நியாயத்தை தெரிவி. அவர்கள் தவறு செய்யும்போதெல்லாம் கண்டி. அடங்காதவர்களை நியாய சபைக்கு இழு. சுத்தம், சுகம், உழைப்பு, ஒற்றுமை, நடுநிலைமை இவை நற்பிரஜைகளின் நாகரீகமாகும். இதனால் நீதியின் நீரோட்டத்தை மற்றவர்களும் பருகி களைதெளிய ஆதாரமாயிருக்கிறது.

4 ஏழை, திக்கற்றவன், நிலையற்றவன், அறிவில்லாதவன் இவர்களிடத்தில் நீதியை தயாளமாய் வழங்கு அவர்கள் தவறை சாந்தமாய் உணர்த்து. கடுந்தண்டம் உபயோகியாதே. பாவம், பலவித கஷ்டத்திலாழ்ந்து கிடப்பவர்களுக்கு தவறின் உண்மை சீக்கிரம் புலப்படா. அவர்கள் தேவைக்கு நியாயமே வேறு என்பர். அவர்களிடம் நீதியை நாட்டுவதைவிட முதலில் கஷ்டத்தை நீக்க முயலுதலே உயர்வழி.

5 அரசாங்கத்தினிடத்தில் நீதியாய் நட. சட்டத்தை அனுசரி. அவர்களிடம் ஒளிவின்றி உண்மையை கூறு. உத்தம சட்டத்தை உண்டுபண்ணு. முடியாத விவகாரங்கள் தவிர மற்ற

விவகாரங்களை அவர்களுக்கு தொந்தரவின்றி நீயே விசாரி. குற்ற விசாரிப்பை நீட்டிவைக்காமல் தவறோ சரியோ அன்றாடம் குற்றங்களை அன்றாடம் பைசல் செய். அல்லது மன்னித்துவிடு.

தெருக்களிலும் உத்தியோக சாலைகளிலும் நீதியாய் நட. உனக்கு தெரிந்த நியாயத்தை சொல்ல தயங்காயே.

போக்கிரி, பணக்காரன், சாயக்காலுள்ளவன் என்று பயந்து உன் சாக்ஷியை கூறவோ, தடுக்கவோ பயப்படாதே. நிரபராதிகள் தெருக்களில் அடிக்கப்படுவதையும் அவர்கள் பொருளை பிடுங்கப்படுவதையும் நீ பார்த்துக்கொண்டிருக்கலாமா? நமக்கென்ன என்று சொல்வது நோயாளிகளின் கூற்று. ஏன்? கடவுளுடைய நீதிபரிபாலன செங்கோல் ஒவ்வொருவனிடமும் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த ரகஸ்யத்தையறிந்தவனே சுயமரியாதைக்காரனாகிறான்.

எல்லாரிடத்தும் நீதியாய் நட. அனைவருக்கும் உன் நீதியை வழங்கு. நிறைந்த கல்வியும் மனப்பழக்கமுமே அதை உலகுக்கு வழங்கிவருகிறது. நீதிமானே தேவர் கூட்டத்தைச் சேர்ந்தவன். தாக்ஷண்யமென்பது பக்ஷபாதத்திலல்ல. ஒருவர்க்கு உதிவுவதில் தான். நீதிமானென்று பெயர் எடுப்பது கொடிய கஷ்டமாகும். பலர் பகைக்கு ஆளாகவேண்டும். ஆயினும் பயப்படாதே! உன்னை இறந்தவர் வரிசையில் பதிவு செய்துக்கொள். பட்டினத்தாரும் "செத்தாரைப்போலத்திரி" என்றுகூறியுள்ளது நீதியை வழங்குவதாலுண்டாகும் பயங்கொள்ளிதனத்திற்கே.

உன்னைபற்றி மற்றவர்கள் என்ன நினைத்துக்கொண்டாலும் அல்லது உனக்கு தீங்குசெய்ய நினைத்தாலும் நீ எதை சத்தியம் நீதி என்று எண்ணுகிறாயோ அதை செய்யப் பயப்படாதே. பிறருக்கு நீதிவழங்குதலிலும், நன்மை செய்வதிலும் தனக்கு அபாரசக்தியுண்டென நினைக்கிறவனே சுயமரியாதைக்காரன் எனப்படுவான்.

சுகாதாரம்.

(58 வது பக்கத்தொடர்ச்சி.)

உணவு, உடை, வீடு முதலியவற்றிற்காக தீயவழிகளாலும் தவறான செய்கைகளாலும் சம்பாதிப்பதும், பக்குவப்படுத்துவதும், அலங்கரிப்பதுமான பிப்பாய்களெத்தனை! எத்தனை! பேச்சு எண்ணங்களால் பிழைசெய்து தீராப்பிணிகளால் வாடி அப்பிணிகளுக்காக மருந்து தேடுவதிலேயே பொழுதுபோக்கும் மாந்தர் எத்தனை! எத்தனை! சதா மருந்தை யுண்டு குடல் அழுகி சாகுபவர்கள். தலைவலி வந்தால் உடனே டாக்டருக்கு தந்தியடிப்பதும், காய்ச்சல்வந்தால் உடனே டாக்டர்களை அழைத்து பிரசங்கங்கள் செய்வதும், பிணிக்கூண்டில் பிணிப்பட்டு மருந்தின் மாய்கையில் சிக்கிக்கிடப்பதுமான மக்கள் எத்தனை கோடி! இயற்கையில் வந்த வியாதியை இயற்கை சாந்திகளால் பரிகாரம் தேட மதிகெட்டுமாளும் வாலிபர் அனந்தமன்றோ? என்னே மனிதன் மருந்துக்கு அடிமைபட்டுழல்வது!

இயற்கை வாழ்க்கை அதாவது கிருமவாழ்க்கையின் சுகோதயத்தை கருதாது ஆடம்பரவாழ்க்கைக்கு மனிதன் ஆசைப்பட்டதினால் கிராமவாழ்க்கையை துறந்து பட்டணவாழ்க்கைக்கு ஆசைப்பட்டதின்பயனால் எங்கனும் சாக்கடை நாற்றம் அந்த சாக்கடைமீது பிரதிஷ்டை செய்யப்பட்ட காப்பிக்கடைகள் சாக்கடை ஈக்கள் மொய்க்கப்பட்ட பலகாரக்கடைகள், சுத்த தண்ணீர் கஷ்டம், நல்லகாற்றின் பஞ்சம், குடலை வேகவைக்கும் தீய உணவுகளின் அபரிமிதம் இவைகளெல்லாம் சேர்ந்தன்றோ. மனித வாழ்க்கையின் சுகவீனத்தையுண்டாக்குகின்றன.

நவீன நாகரீக வீட்டிலுள்ளவர்களின் தினசரிக்குறிப்புகள் விநோதமானவை. காலையில் 10 மணிக்குமேல் சூரியன் அவர்களை பொறுமையுடன் எழுப்பிவிடுகிறான். பாதிதூக்கம் கண்களில் பிர்மஹத்திபோல் ஆடுகிறது. படுக்கையில் இப்படியப்படி புரண்டு நீட்டி நெளித்து நெட்டியிட்டு கொட்டாவியுடன் அவர்கள் எழுந்து உடனெ பல்லை பற்பொடியால் பிலியால் விளக்கின

உடனே அடுத்த அனுஷ்டானம் நேராக உணவுதான். எழுந்ததும் சுருட்டு பிடித்தல், வெற்றிலைபாக்கு, புகையிலை, உபயோகித்தல். 10 நிமிஷத்திற்குள் இட்டிலி, தோசை, ரவா, உப்புமா, முதலிய வைகளை காப்பி கடைகளுக்கு சென்று விழுங்கிவிடுவார்கள். ஏழைகள் ஓர் சட்டி பழையசோறும் அழுகின அல்லது ஊசிப்போன பழங்காய்கறிகளை விலாப்புடைக்க உண்பர். காப்பிக்கடைகளில் காப்பியாற்று சப்தமும், கிண்ணிகளும், தட்டுகளும் இங்குமங்கும் பாய்ந்து விளையாடுவதின் ஓசைகளும் நாணயத்தின் கிண்கிணி சப்தமும் பார்க்க சினிமா காக்ஷிபோன்றதே? காப்பி முடிந்ததும் சிலர் பத்திரிகை படிப்பார். சிலர் உலகத்தையே பிறட்டிவிடுகிறேனென்பார் சிலர் கக்ஷிகாரர்களுக்கு தைர்யம் கூறுவர். சிலர் பிரமாதமாக சட்டைகளையும் தொப்பிகளையும் மாட்டிக்கொண்டு மருந்து கொலுபீடத்தின் பிணிகளின் தூதர்போல் அமர்ந்திருப்பார். சிலர் சிறு பிள்ளைகளுக்கு அப்பியாசிக்க கள்ளுக்கடைகளை திறந்துவைப்பர் பற்பல தொழில்களில் புகுந்து உழைத்து வயிற்றைக்கழுவும் மக்கள்போக கொஞ்சம் சோற்றிற்கிருப்பவர் தங்கள் வீட்டில் மந்தமாக உட்கார்ந்திருப்பர். அல்லது அடுத்தவீட்டுக்காரனை சண்டைக்கு இழுத்து நிற்பர். அல்லது ஓயாது அரட்டை அடித்துக்கொண்டு ஊர் சுற்றுவர். சிலர் தனக்கு வேலையில்லாதபோது பிறர் அடையும் சௌக்கர்யத்தை கண்டு பொறாமையால் அவர்களுக்கு இடையூறு செய்வர். அல்லது எந்தவிதத்திலாவது அவர்கள் வாழ்க்கையை குலைப்பதற்கு வழிதேடுவர். வியாதியஸ்தர்கள் தரித்திரர்கள் இன்ஸால்மெண்டு போட்டவர்கள் அல்லது பலவித கொடுமுடிகள் செய்கிறவர் தாங்கள் கெட்டதுமல்லாமல் மற்றவர்களும் அந்த சூழ்ச்சியில் அகப்பட்டுக்கொண்டு திண்டாடும்படி போதனை செய்வார்கள். உத்தியோகஸ்தர்கள் 10 மணியானதும் இலைமுன் உட்கார்ந்துவிடுவார்கள். கஞ்சிவடித்த மில் அரிசிசாதம் (உயிரில்லாத சக்கை) ருசியான புளி மிளகாய் பாகோடு கிளரி விழுங்கி கை கழுவி வெற்றிலைபாக்கு போடுவார். சிலர் சாப்பிட்டதும் சுருட்டு பற்றவைப்பார். சிலர் வாசனைபுகையிலை அடக்கிக்கொண்டு அடிநாக்கால் பேசித்திரிவார். சிலர் சட்டைகளில் ஒளிந்துகொண்டு உத்தியோக சாலைகளுக்கு

போவார்கள். வேலையில்லாமல் வீட்டில் உறங்கிக்கிடக்கும் படித்த மக்கள் பன்னூறு. சிலர் உண்டமயக்கம் தீர தெருத் திண்ணைகளில் படுத்து தூங்கும் சோம்பேரிகளனந்தம் சீட்டுக் கச்சேரிகளை வீட்டுத்திண்ணையில் விரித்துக்கொண்டு போவார் வருவார்களை கெஞ்சியழைக்கும் திமிர்வாதிகள் அனத்தம். சூதாடுதல், வாதாடுதல், வஞ்கித்தல், முதலிய பல தீயகாரியங்களில் எஞ்சிய மக்கள் ஈடுபடுவர். போகட்டும் உத்தியோகஸ்தர் மறுபடியும் 2 மணிக்கு பலகாரம் காப்பி பருகுவர். பிறகு மாலை ஆறுமணிக்கு உத்தியோக சிறையினின்றும் வெளியேறுவர். பந்தாடுவர் பலர்க்கு குடும்பக்கவலைகள் மலைபோலிருக்கையிலேயே வெளிக்கு பலவித ஆடம்பர சாமான்களை பரப்புவதும் கடன்பட்டு வீட்டையும் நகைகளையும் செய்து பின்னர் உபத்திரவத்தால் தற்கொலை செய்துக்கொள்வாரும் ஊரைவிட்டு ஓடுவாரும் வெகுபேர். நாகரீகமுள்ளவர்களும் ஜனங்களை ஏமாற்றி அதிகப்படி சம்பாதிப்பவர்களும் அடிக்கடி காப்பிக்கடைகளுக்குள்ளும் கள் சாராயக்கடைகளிலும் நுழைவர். நாள்முழுதும் வேலைசெய்த கூலிகளும் கள்குடித்து ஆடுவர். உஸ்கி சாராயம் எக்ஷா முதலிய பானங்களை பருகி கண் சிமிட்டி புன்னகைசெய்து குதற்கம் வேதாந்தம் பேசும் கோஷ்டினர் வெகுபல. சிலர் சட்டையைக் கழட்டாமலே இராச்சாப்பாட்டுக்கு உட்கார்ந்து மூர்ச்சை பிடித்துக்கொண்டு உண்பர். பிறகு சலனப்படக் காக்ஷிகளுக்கு உயிரை பிடித்துக்கொண்டு ஓடுவர். சிலர் திருட்டு வியாபாரங்களில் சிந்தை செலுத்துவார் சிலர் காமப்பேய்கள் போல் உருக்கொண்டு நாய்கள்போல் தெருக்களிலலைந்து போகும் வரும் பெண்மக்களை ஏமாற்ற முயலுவர், காமமும் கள்ளும் சூதும் மனித உருவெடுத்து ஆடல்பாடல்களை செய்வதுபோல் நாடக கொட்டாய்களிலும் வெளியிலும் நடந்துகாட்டுவர். நாகரீக சிகரத்தையடைய முயலுகிறவர்கள் தங்களிடத்தில் ஒப்புவித்த பொருளை மோசம் செய்வதும் அண்டினவர்களை கெடுப்பதும் பொய்கணக்கு ரூபாய்பாண்டு சோடித்து பலமில்லாதவர்களையும் திக்கற்றவர்களையும் ஏமாற்றி விழுங்குவதனால் விளையும் சண்டை சச்சரவுகள் மனவருத்தம் பிராணுபத்துகள், கொலை, நோய், பயித்தியம், ஒற்றுமைக் குறைவு, நம்பிக்கை குறைவு முதலிய பல பிணிகள் தேசத்தில் தாண்டவமாடுவது என்ன விந்தை!

ஏதனால் இவைகள் விளைகின்றன. ஒரு மனிதன் தன் அளவுக்கு மிஞ்சி பணத்தை சேகரம் செய்ய முயலுவதே இத்தனைக்கும் காரணமாகும். அதோடு நித்திய அனுட்டானவிதி ஒழுக்கங்கள் சன்மார்க்கங்கள் தர்ம நீதிகள் முதலியவற்றை பயிலாமலும் பழகாமலுமிருப்பதே அவைகளுக்கு இரண்டாவது காரணமாகும். செல்வந்தர்கள் சமூகசீர்திருத்தம் செய்ய முன் வாராமையும் பணத்தை மலைபோல் குவிப்பதே மனிதபிறவியின் பயன் என்று கருதினால் இவ்வித நாட்டு ஊழல்களெல்லாம் எவ்வாறு ஒழியும் இந்நாட்டு உயர்ந்த நோக்கத்தையரியாத மேனாட்டு அரசியல்முறை நம்மை இந்திரஜித்துவின் நாகபாசம் போல் கட்டுப்படுத்தி அதன் விஷப்புகையில் புத்திமயக்கங்கொண் டிருப்பதே இவ்வித அனந்த சுகவீன அனர்த்தங்களுக்கும் காரணமாகும்.

ஜலத்தை சுத்தி செய்யும் சுலபமான வழி.

உலகத்தில் மக்கள் பெறுவதற்குரிய பேருகளனைத்தினும் மிக்க அத்தியாவசியமானது சுக வாழ்வு நமது வாழ்க்கையை இரு கூறுகப் பிரிக்கலாம். ஒன்று சரீர சம்பந்தமானது, மற்றொன்று ஆத்ம சம்பந்தமானது சரீரத்தை போஷிப்பதற்கு காற்று, ஜலம், உணவு, உடை முதலியன சுத்தமாயிருத்தல் வேண்டும். ஆத்துமத்தை போஷிக்க அல்லது ஆத்மசக்தியை வளர்க்க உண்மை நூல்களால் ஏற்பட்ட அறிவும், அதன் சார்பாக வெழுகின்ற நல்லொழுக்கம், சன்மார்க்கம், தெய்வபக்தியு மாகும். ஆயினும் சரீர வாழ்க்கைக்கும் ஆத்ம வாழ்க்கைக்கும் பெரிதும் சம்பந்தமிருக்கின்றது. அஃது

> வையகத்து வாழ்வாகு வாழ்பவன் வானுறையும்
> தெய்வத்துள் வைக்கப்படும்—குறள்

என்றும் பொய்யாபுலவரின் வாக்கு மிக்க பொருத்தமுள்ளது காண்க. "அண்டத்திலுள்ளது பிண்டத்திலுண்டு" என்னும் மூதுரையும் மேற்குறிப்பதாகும்.

உலகத்தில் செம்மையாக வாழ்பவன் பரத்திலும் செம்மையாக வாழ்வானென்பது இதன் கருத்தாகும். எனவே தனது சரீரத்தை சுசியாகவும், செம்மையாகவும் போஷிப்பவனின் ஆத்ம நிலை (மனோதிடம்) தெளிவாகவும், சுறுசுறுப்பாகவும் அறிவை கிரகிக்க வளமாகவுமிருக்கும் காரணம் சரீர சுகமில்லாது நோய் வாய்ப்பட்டிருப்பின் மனமும், புத்தியும் ஓர் நிலையில் நில்லாது மங்கி செய்வன செய்யாதொழிந்தும், செய்யத்தகவில செய்தும், ஆத்துமத்திற்கு பழியையும், பாவத்தையும் சுமத்தி ஆத்ம வாழ்க்கையை குலைத்துவிடுகின்றன. ஒருவேளை சரீர போஷிப்பின் தவறினல் சரீரத்திற்கு ஹானி விளைத்து அதன் மூல்யமாய் சரீரத்தையும், அருமையான ஆத்துமத்தையும் இழக்க நேரிடுகின்றன. அந்தோ! என்ன பரிதாபம்! இதனல் விளங்குவதென்ன! தேக வனப்பினேடு ஆத்ம வனப்பும் பொருந்தப்பட்டிருப்பது கண்கூடு. ஆகவே மக்கள் பரலோக வாழ்வையடைவதற்கு ஆத்ம சுகவாழ்வு அவசியத்திலும் அவசியமானது.

சரீர வாழ்க்கைக்கு இன்றியமையா பொருள்கள் முன்னமே கூறியுள்ளோம். அவற்றுள் சாலச்சிறந்ததும், நமது பழைய பழைய மூதறிஞர்களால் போற்றப்பட்டதுமான ஜலத்தை பற்றி இங்கு விசாரணை செய்வோம்.

எல்லா அண்ட அடுக்குகளுக்கும் பொதுவாய் சக்தியென்ருென்றுள்ளது. (Power) இதை கடவுளென்றும், இயற்கையெனவும் பலர்பலவிதமாக கூறுவர் அவ்விதசக்தி இருவித குணக்கோட்டை பெற்றதாய் விளங்குகின்றன அவை பாயும் சக்தி (Electrical force) தாங்கும் சக்தி (Magestive force) என்பர் இதனை இந்நாட்டு புலவர் "பெண்சக்தி, ஆண்சக்தி" என புனைப்பெயரிட்டுள்ளார்கள். இவ்வித இரு சக்திகளடங்கப்பெற்றதாய் பிரிதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் என பஞ்சபூதங்கள் உலாவுகின்றன. இவற்றில் ஜலம்—கங்காதேவியென்றும், ஆகாசம்—ஆகாசவாணியென்றும், பிரிதிவி—பூமி—பூமாதேவியென பெண் நாமமிட்டும்; வாய்வு—வாய்வுபகவானென்றும், தேயு—அக்கினி பகவானென்றும், ஆண்குறி பெயர்களாற்புனைந்து வழங்குதற்காண்க. ஜலம் எல்லா உயிர்களுக்கும் ஆதாரமான பஞ்ச பூதத்

துள் ஒன்று. அதனை கங்கை, ஜலம், தண்ணீர், தீர்த்தம், திரவமென பல பெயரிட்டு வழங்குவது சாதாரணமாய் வழக்கத்திலிருக்கின்றன, ஞான சிகாமணிகள் தண்ணீரை கெங்கையெனவும் பெண்டன்மை பெற்றதெனவும் சிறப்பு கூறி போந்தனர் தத்துவ ஆராய்ச்சிப்படிக்கு உண்மையிலும் அவைகளிடத்து பெண்ணீர்மையுண்டென்பதற்கு பல சான்றுகளிருக்கின்றன.

பொது சம்ஷ்டியில் இந்த பூதங்களை மட்டுமல்ல உலகத்து சாாசரப் பொருளையெல்லாம் இந்து கவிவாணர்கள் ஆணாகவும், பெண்ணாகவும் சந்தர்ப்பம் நோக்கி லக்ஷணை கூறியிருப்பது வியக்கத்தக்கதாயிருக்கின்றன உதாரணமாக விளக்கை காமாக்ஷி என்றும், துடப்பத்தை லக்ஷ்மியென்றும், அம்மியை அருந்ததியென்றும் வழங்குவதினால் அதன் உண்மையை பாக்க காண்டல் வேண்டும் ஆசையை காமன் என்றும், சாவை எமன் என்றும், மழையை வருணன் என்றும் புருஷார்த்தமாக கூறும் வியப்பையும் இன்னும் கூர்ந்து கவனிப்பீர்களாக.

இனி கங்கையின் புராணக்கூற்றை கவனிப்போம். இந்து வேதங்களிலும், உப புராணங்களிலும் கங்கையை ஈஸ்வரன் ஜடா முடியில் தரித்திருப்பதாகவும் கங்கை பரமசிவனுக்கு பாரியாளென்றும் வர்ணிக்கப்பட்டிருக்கின்றன பரமசிவன் யோகியாகையால் சதா கங்கையில் ஸ்நானம் செய்தே தீரவேண்டும் யோகாப்பியாச இலக்கணப்படி முனிவர் சதா ஜலத்தில் மூழ்கியும் சடை உலராமல் ஜலம் தங்கியுமிருத்தல் வேண்டும் பரமசிவன் யோகபுருஷனாகையால் அவர் காலத்தை பெரும்பாலும் யோகத்திலேயே செலுத்துவது சகஜமாயிருத்தது பல வருடங்களையும் யோகத்திலிருந்து அசையாமலிருப்பது யோகிகளின் வழக்கம். இக்காரணத்தினால் மூளை கொதிப்புண்டு சில வேளைகளில் கபாலம் வெடிப்பதும் உண்டு இதற்கு ஜலத்தில் மூழ்குவதே பரம ஔஷதம் இக்காரணத்தினால் பரமசிவன் சதா ஜலத்தை சிகையில் சுதர விட்டிருப்பது யுக்தம் இதனாலன்றோ பரமசிவன் சிகையில் கங்கையை வைத்திருப்பதாக வசனிக்கப்படுகின்றன. விசேஷவுரையாக விளக்கவேண்டின் உலகத்து உயிர்களெல்லாம் தண்ணீரை பாரியைவிட அதிகமாய் நேசித்து வருகிறார்கள். அதி

னும் யோகிகள் ஜலமே தங்கள் பிராணுதாரத்திற்கு காரண பதார்த்தமாய் உண்டு வருகின்றுர்கள். பாரியென்பதற்கு அன்புயெனப் பொருள் படுமாகையால் பரமசிவன் கங்கையை பாரியாக கொண்டுள்ளாரென ஞானர்த்தமான பொருளில் தத்துவம் கூறப்பட்டிருக்கிறது.

இதினின்று தெரிவதென்னே! இந்த உலக சம்பந்தமானநிலையில் ஸ்தூல உடம்பினுலாகிய கங்கையெனும் பெண்ணை கேவலம் காமயிச்சையின் பொருட்டு மனைக்கிழத்தியாகக்கொண்டுள்ளாரில்லை. பாரமார்த்திகமாக அன்பை ஜலத்தினிடத்து செலுத்தி வந்தாரென்பதே உண்மை விதி. இக்காலத்துங்கூட மேல் நாடுகளிலும், கீழ்நாடுகளிலுமுள்ள பல பேறறிவாளர்கள் பெண்களை காமக்கிழத்தியாக வரிக்காமல் மனித சமூகத்தில் புகுந்து பல காரியமாற்றுதற்கரும் துணைவியாகவே மணக்கின்றனர் மகாவிஷ்ணு மார்பில் லக்ஷிமியை வைத்திருப்பதும், சரஸ்வதியை பிர்மா நாவில் வைத்திருப்பதும் இதைப்போன்ற உலமை கட்டுரைகளாகும். லக்ஷ்மி, சுப்பிரம், அலங்காரம், கலை, அழகு என்பது பொருட்படும். லக்ஷ்மியென்பது பண்பு பெயர்ச்சொல் பெண்பாலில் சிறப்பு வைத்து கூறப்படுகின்றது. சத்வம், ரஜோ, தமோ யென முக்குணங்களில் மகாவிஷ்ணு ரஜோகுணம் பெற்றவர். ராஜ அம்ஸம் சிங்கார அலங்கார பிரியர். விலை உயர்ந்த பொன்னுலும், வெள்ளை சற்களாலும், சித்தரிக்கப்பட்ட ஹார கேயூர கடக கங்கணம் தரித்திரிப்பதாலும், மார்பு தங்கமயமாய் ஜொலிப்பதாலும், அவர் மார்பில் லக்ஷ்மி வாஸம் செய்கிறுள் என்று பண்பாலணையும், உயர்திணை பெண்பால் பெயரைச் சூட்டி மகிழ்வது அக்காலத்து அறிவாளிகளின் மனேவிருந்தாகும்.

இம்மாதிரியே நான்முகனுக்கும் ஓர் சிறப்பு கூறப்பட்டுள்ளது. சரஸ்வதி—கல்வி, படிப்பு, வித்தை, ஞானம், என்று பொருள்ப்படும். சதுர்முகன் கல்வியும், சிருஷ்டிப்பு தொழிலுமுள்ளவராகையால் அவர் நாவு சதா மந்திரங்களை பஜித்துக் கொண்டேயிருக்கும். அதனுல் சிருஷ்டி சங்காரம் இடைவிடாது

நிகழ்துக்கொண்டேயிருக்கும். அதனுல் அவர் நாவில் சரஸ்வதி அல்லது கலைமகள் குடிகொண்டுள்ளளாரென பஜிக்கப்படுகின்றது இது வினைபாலனையும் பெண்பால் பெயராகும். இதுவன்றி ஆணை பெண்ணாக பெயரிட்டு கூப்பிடுவதும் பெண்ணை ஆண் பெயரிட்டு கூப்பிடுவதும், வீட்டில் பழகும் பசு, நாய் முதலியவற்றிற்கு (மனிதர்) உயர்திணைப் பெயர்களை வழங்குவதும் சிறப்புபற்றி அழகாக கூப்பிடுவதும் நம்மவர் வீடுகளின் வழக்கமன்றோ? இதைப் போன்றே கல்வி அமுதத்தை அளவு கடந்து குடித்தவர்கள் உலகத்துக்கு வியப்பையும், ஆனந்தத்தையும், கல்வி மணப்பழக்கம் பெருத கீழ்மக்களுக்கு தீரா சந்தேகத்தையும் விளைவிக்கு முறையில் பலப்பல எழுதியும் சொல்லியும் போந்துள்ளார்கள்.

இந்த விசேஷ குறிப்புகளை வெளிப்படையான அர்த்த வியாக்யானத்தில் சிக்கவிட்டு பிர்மாவின் நாக்கில் பெண் எவ்வாறு வசிப்பது? பரமசிவன் சிகையிலிருக்கும் கங்கைக்கு மலஜலம் கழிக்குமிடமெங்கே? மார்பில் பெண்ணை வைத்துக்கொண்டு எப்படி சிருஷ்டிசங்காரம் செய்வது? இது தேவர்களுக்கு அடுக்குமாவென விதண்டாவாதம் கூறுவதும் பிறமதத்தினர் எள்ளி நகையாட ஏமார்ந்து சிரிப்பதும் உட்புலனையறியாமாந்தர் செய்யும் செய்கையல்லவோ?

வயித்தியம்

சமய பரிகாரம்.

1 காதுவலிக்கு சாம்ராணியை பொடித்து எண்ணெயில் போட்டு காய்ச்சி மூன்றுவேளை காதில் நாலைந்து துளி விட வலி நீங்கும்.

2 விறை வீக்கத்திற்கும் கணுங்கால் நோயுக்கும்.

நொச்சிலையை வேகவைத்து கட்ட குணமாகும்.

3 மலச்சிக்கலுக்கு துத்தியிலையோடு பச்சைப்பயறு வெங்காயம் சமமாய் சேர்த்து சமைத்து சாப்பிட தினவாரி மல சிக்கல் நீங்கும்.

4 வாய் வேக்காடு (a) அகத்திக்கீரை கொழுந்தை பறித்து காலை வேளையில் மென்று மூன்றுநாள் தின்ன சுகமாகும்.

(b) மனத்தக்காளி இலையோடு சிறுபயறு சேர்த்து சமைத்து சாப்பிட சுகமடையும்.

(c) (மருதனி இலை) அழவெண்ணெய் இலையை கியாழம் வைத்து வாய்க்கொப்பளிக்க நீங்கும்.

5 காது சீழ் வடிவதற்கு வில்வப்பழ சதையை எள் எண்ணெயில் போட்டு காய்ச்சி ஆறிய பிறகு காதில் விட தீரும்.

6. காதில் சீழ் குத்தலுக்கு பருத்தி இளங்காயாவது எருக்கன் இளங்காயாவது வெதுப்பி சார்பிழிந்து காதில் விட தீரும்.

மேஸ்திரிகளுடைய கஷ்டங்கள்.

நீர்வளத்திலிருந்தே நிலவளம் முதலிய சகலவளங்களும் பெருகுகின்றன. உத்தியோகஸ்தருக்கு வேண்டிய சகல உணவுப் பண்டங்களை விளைவிக்கக்கூடிய மூல காரணமானது மராமத்து இலாகா. மராமத்து இலாகாவின் கீழ்தர உத்தியோகஸ்தர் மெஸ்திரிகளாவார்கள். மந்திரிகளும் பெரிய உத்தியோகஸதர்களும் உல்லாசமாக துரிதமான வண்டிகளில் ஊசலாடிப் போய்க்கொண்டிருக்கும் வசதிகளாகிய ரோட்டு செப்பனிடும் கீழ்தர உத்தியோகஸ்தர்கள் ரோட்டு மேஸ்திரிகளாவார்கள். இந்த மேஸ்திரிகள் படும்பாடு பஞ்சைவிட மேலதிகமாயிருக்கிறது. உரிமை கூலிகளைவிட கேவலமாயிருக்கிறது. கூலிக்காரராவது கூலியை தாக்ஷண்யமின்றி கேட்க உரிமையிருக்கிறது. இவர்களுக்கு அதுவுமில்லை மத்தளம்போல் இருபுறமும் கஷ்டத்திலாழ்ந்து கிடக்கிறார்கள்.

ஆங்கில அரசாங்கத்தில் நூற்றுக்கணக்கான இலாக்காகள் இருக்கின்றன. அவைகளில் ஒன்றிலாவது மேஸ்திரிகளைப்போல் துரதிஷ்டமான உத்தியோகமே கிடையாது. யூனியன்ஸ்வீப்பர் வேலைசெய்கிறவன்கூட மாதாமாதம் சம்பளம் பெறுவதோடு

உத்தியோகம் நிரந்தரமாயிருக்கிறது. நாம் ஒரு நிலைவரமான பிழைப்பை நடத்துகிறோமா வென்பதே அவர்களின் சதாகால கவலை அவரை நம்பி காலணாகடைகாரரும் கூட வேறு ஒருவரும் கொடுக்கமாட்டார்கள். கொடுக்க நியாயமுமில்லை. உபாத்தியார்களுக் கிருக்கும் நிலைமையும் கிராண்டுடியும்கூட இருந்தால் ஒருவாறு திருப்திகரமாயிருக்கும் ஆனால் வேலை விஷயத்தில் உபாத்தியாயர்களைப்போல் நாற்காலிகளில் மணிபிரகாரம் வேலை செய்கிறவர்களல்ல சில சந்தர்ப்பங்களில் இரவும் பகலும் அன்னந்தண்ணீர் கிடைக்காத காட்டில் கான்கிரேட்டோ வேறு வேலைகளோ செய்ய நேரிடுகிறது அதனால் மேஸ்திரிகளைப்போல் பட்டினிகிடக்கும் தொழில் வேறொன்றுமில்லை மேஸ்திரி வேலையை தற்காரியமாய் வைத்திருப்பதனாலே சமர்த்தர்களும் அறிவாளிகளும் நிலைத்திருக்காமலும் தக்க அநுபவம் பெறாமலும் வேறு இலாகாக்களுக்கு போய்க்கொண்டிருக்கிறார்கள் நேற்று ஆரம்பித்த பயிரிடும் இலாகா (Agriculture Dt.) மேஸ்திரிகள் 50 வரையில் சம்பளம் பெற்று சுகமாக ஜீவிக்கிறார்கள் ஆங்கில ஆக்ஷிக்கே ஆதாரமான இலாகா மேஸ்திரிகளால் செப்பனிடும் ரோட்டுகளில் ஆங்கில ஆக்ஷியின் ஜயஜங்க மூதிக்கொண்டோடுகிறது. ஆ! ஆ!! என்ன கொடுமை! அவர்களுக்கா நிலைவரமான உத்தியோகமில்லை! அவர்களுக்கா நிலைவரமான சம்பளம் கிடையாது! அவர்களுக்கா லீவு பென்ஷன் கிடையாது அந்தோ! என்னபரிதாபம்.

இனியாவது கவர்ண்மெண்டாரும் செல்ப் கவர்ண்மெண்டு மந்திரிகளும் பிரஸிடெண்டுகளும் தக்க உதவிசெய்ய முன் வருவார்களென்று கோரப்படுகிறது. இன்ஜினீரிங் டிபார்ட்மெண்டார் அதற்கு தக்க சிபார்சு செய்தும் தாங்கியும் எழுதுவார்களென மன்றாடப்படுகின்றது.

டிஸ்டிரிக் போர்டு மெம்பர்களும், பிரஸிடெண்டு அவர்களும் பெரு முயற்சி எடுத்துக்கொள்ளாவிட்டால் இது எளிதில் சித்திபெறாது. எல்லா மேஸ்த்திரிகளும் தீவிர முயற்சி செய்தால் தான் நன்மை பயக்கும்.

சாலைமார்க்கமாய் போகும் ஒவ்வொருவரும் கவனிக்கவேண்டிய விதிகள்.

1 துரிதமான வண்டிகள் (மோட்டார்) ரோட்டுகளில் 1 மணிக்கு 30 அல்லது 40 மைல் ஓடிக்கொண்டிருப்பதால் பிரயாணிகளுக்கு அடிக்கடி ஆபத்து நேரிடுகிறது. ஆகையால் பிரயாணிகள் எப்பொழும் ரோட்டின் ஓரத்தில் இடதுபக்கமாகவே போக பழகவேண்டும். ஏதேனும் சத்தம் கேட்டால் அது முன் பக்கத்திலிருந்தா பின்பக்கத்திலிருந்தா வருகிறது என்று பார்த்து வில வேண்டும். (4) ரயிலாவது மோட்டாராவது 1 மைலுக்கு அப்பால் வருகையிலேயே நாம் விலகி நடக்கவேண்டும். சமீபத்தில் வந்தவுடன் விலகிக்கொள்ளலாம் என்று நினைப்பது சுத்த முட்டாள்தனம். ஒருவேளை தான் சமீபத்தில் வந்தவுடன் விலகிக்கொள்ளும் சக்தியிருந்தபோதிலும் கார்ஓட்டிகளுக்கு மிக்க பயமேற்பட்டு தங்கள் வேலைகளை சரிவர செய்ய முடியாமல் கஷ்டம் விளைகிறது. (5) ஜனங்கள் ஒருவருக்குப்பின் ஒருவராக வீதிகளிலும் சாலைமார்க்கமாகவும் போகவேண்டுமேயொழிய வரிசையாக கைகோர்த்துக்கொண்டாவது அலட்சியமாய் பேசிக்கொண்டாவது போகப்படாது. (6) பாதையை குறுக்கிடுதல் சிறு பிள்ளைகளும் பெரியோர்களும் ஒரு வீட்டிலிருந்து எதிர் வீட்டுக்கு வேகமாய் ஓடுவதாலும் ரோட்டின் குறுக்காக போவதாலும் ஆபத்து உண்டாகக்கூடியதாயிருக்கிறது. அப்படி குறுக்கே போகும்போது இரண்டு பக்கங்களிலும் காராவது வேறு துரிதமான வண்டிகளாவது வருகிறதாவென்று நன்கு கவனித்த பிறகே போக துணியவேண்டும். வண்டிகளை 20 கஜத்துக்குள் வருகையிலேயே நாம் ரோட்டை கடந்துவிடலாமென முயற்சிப்பது தவறு. (7) வண்டிக்காரர்களும் சிலமுரட்டுமனிதர்களும் கார்டிரைவரே ஒதுக்கி ஓட்டிக்கொண்டு போகட்டுமே என்று அசட்டுதனமாய்நடப்பதும் அப்படி கார்ஓட்டி நம்பேரில் விட்டுவிட்டால் அவர்களை சர்க்கார் தண்டிப்பார்கள் என்று எண்ணுவதும் பயித்தியக்காரதனமாகும். அப்படி அவர் தண்டிக்கப்படுவதற்கு முன்னரே இறுமாப்பாய் நடந்து செல்லும் பிராணிகளின் பிராணன்என்ன

கதியாகும்? அவர்கள் அப்படி செய்யாமல் தடுக்கப்படுகிறார்கள். பள்ளிக்கூட பிள்ளைகளும் கண்மூடித்தனமாய் பள்ளிக்குபோவதும் ஓடுவதும் ஒருவரை ஒருவர் துரத்திக்கொண்டு ஓடுவதும் வீதிகளில் கூடாது. இதனால் ஆபத்து நேரிடும். இவைகளை மணியக்காரராவது உபாத்திமார்களாவது ஜனங்களை கூட்டி போதிக்க வேண்டும் செவிடு குருடு முதலிய மந்தகரமானவர்களுக்கு தனிப்பட விளக்கிக்காட்டவேண்டும். இது அவர்களின் முக்கிய கடமையாகும்

சினிமா அல்லது பேசும் படக்காக்ஷி.

மேல்நாட்டு அறிவு வளர்ச்சியின் பயனாய் உலகத்தில் எண்ணிறந்தகோடி அதிசயங்கள் நடைபெறுகின்றன அப்படிப்பட்ட அதிசயங்களுக்கெல்லாம் முதற்காரணமாயுள்ளது மின்சார சக்தியாகும். மின்சாரத்தினால் எளிதில் சொல்லிமுடியாத மகத்தான அற்புதமான வேலைகள் நடந்து வருகின்றன. மின்சார சக்தியைக்குறித்து மிக்க பேர்போன சாஸ்திரிகள்கூட அது இன்னதுதான், இன்ன விதமான தொழில்களைத்தான் செய்யும் என்று திட்டமாய் சொல்ல முடியாத பரம ரகஸ்யமாயிருக்கிறது. ஆனால் நூறு வருடங்களுக்கு முன்பு இவ்வுலகில் வசித்தவர்கள் மறுபடியும் இந்நிலவுலகில் உயிர்த்தெழுந்து பார்ப்பார்களாகில் இது நாம் முன்வசித்த பூமியல்ல ஏதோ ஓர் அதிசய கிரகம் என்று தான் சொல்லுவார்கள். ஓர் நூற்றாண்டுக்குள் விற்பன்ன உற்பத்திகள் வெகு விநோதமாயிருப்பினும் இவைகளெல்லாம் அவைகளின் ஆரம்ப நிலையெனவே மக்கள் கருதவேண்டும். மின்சார உலகத்துக்கு இந்தியா ஓர் கடைசி தேசமாகும். இங்கேயும் உயர்ந்த ஹைட்ரோ எலக்டிரிக் மின்சார உபாயங்கள் ஏற்படுத்தப்பட்டு இயற்கைசக்தியை அவற்றுள்ளடக்கி அவைகளினால் மனுக்குலத்திற்கு மின்சார உபயோகங்கள் எண்ணிறந்தவைகள் உண்டாகின்றன. பஞ்சாப் தேசத்திலுள்ள பூல்நதியின் ஆண்டி அணைக்கட்டும், மேற்கு இந்தியாவிலுள்ள டாட்டா அணைக்கட்டும் தென்னிந்தியாவிலுள்ள மைசூர், மேட்டூர் அணைக்கட்டும் இவ்வதிசய மின்சார சக்தியை உண்டாக்க உதித்திருக்கின்றன.

மின்சார சக்தியை அடக்கி ஆளும் பயனாய் விளைந்த வித்தை ஓடும் படக்காக்ஷி. கோர்வையான போட்டோ படங்கள் திரையில் விழும்போது அவைகள் ஒரே படம் நின்றுக் கொண்டு நடனம் செய்வதாக கண்ணுக்கு புலப்படுகின்றது. காக்ஷியின் நிலை ஒன்றுக்கு நூற்றுக்கணக்கான முறைப்படி ஓடும் படங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. நமது பார்வை திரையில் விழுந்து விஷயத்தை கவனித்து நமது மூளைக்கு கொண்டுபோவதற்கு முன்னமே 1 விநாடியில் 15 படங்களுக்குமேல் விரைவாக திரையில் ஓடிக்கொண்டிருக்கின்றன. தேகத்தை தொடும்போது அந்த உணர்ச்சியை எவ்வளவு விரைவாய் நரம்புகள் மூளைக்கு தெரிவிக்கின்றனவோ அவ்வளவு வேகமாய் ஒலிவட்டத்தை யுடைய படம் பிடிக்கும் கருவியைக்கொண்டு பரீக்ஷை செய்து நூதன முறையைக்கண்டுபிடித்திருக்கிறார்கள். ஒரே உருவமான படங்களாய் திரையில் காண்பிப்பதற்கு ஒளி வட்டங்களும் மூடிகளுமுள்ள ஓர் சூழ்ச்சி செய்யப்பட்டிருக்கின்றன, ஒவ்வொரு படமும் முக்கால் அங்குலம் உயரமும் ஓரங்குல நீலமுள்ளதாய் 16 அடி நீளமுள்ள ஓர் படலத்தில் செய்யப்படுகிறது. திரையிலேயோ அவைகள் மகா பெரிய உருவங்களாக விளக்கின் உதவியைக் கொண்டு காண்பிக்கப்படுகின்றன.

கடைசியாக கண்டுபிடித்திருக்கும் பேசும் படங்கள் எடிசன் என்பருடைய நீண்ட ஆராய்ச்சியின் மூலம் பலவிதமாயிருக்கிறது. 1877 ஆண்டில் சப்தங்களை ஓர் தட்டில் எளிதில் கிரகித்துக்கொள்ளும் விதத்தை கண்டுபிடித்து பிறகு அவைகளை யந்திர சூட்சியால் பேசும் தந்திரத்தை கண்டுபிடித்தான். பேசும் தந்திரங்கள் இப்பொழுது முன்னேற்றமடைந்து ஏறக்குறைய பூமியிலுள்ள சகல பாஷைகளிலும் அது பேசப்பட்டுவருகின்றன. 1894 வருஷம் எடிசன் பேசும் சூட்சியை போனகிறுப் என்னும் குழாய்களின் மூலம் பூர்ணப்படுத்தினர் ஓடும் படம் அதோடு பாட்டுபாடும் சக்தியும் அமைந்த படக்காக்ஷி 1912 வருஷத்துக்கு முன் உண்டாகவில்லை. 1923ல் லிடி பிராஸ்ட் ஓர்வகை உலோகத்தால் தயாரிக்கப்பட்ட சுருளையில் சப்தத்தை பிடித்து வைத்துக்கொள்ளும் முறையை கண்டுபிடித்தான். இவ்வதிசய

முறையினால் படம் பிடிக்கையிலேயே பேசும் சக்தியையும் அதே படலம் கிரகித்துக்கொள்ளுகிறது. அதனால் ஒளி, ஓசை யென்னும் இரண்டு விஷயங்களையும் பூர்த்தியாக காட்டும் திரையாக மாறிவிட்டது. முதலில் படமும், சப்தமும் வெவ்வேராக தயாரிக்கப்பட்டு, சாஸ்திரோக்தமான முறையில் பிறது அவைகள் ஏககால நடைக்கு கொண்டுவரப்படுகின்றன.

திண்டிவனத்திற்கு சமீபத்திலுள்ள மன்னார்சாமி கோவிலுக்கு வழக்கம்போல் நடக்கும் வருஷாந்திர திருவிழாவிற்கு பலி கொடுப்பதற்காக நூற்றுக்கணக்கான ஆடு, கோழிகள் கொண்டுவந்திருந்தன. அவைகள் திண்டிவனம் ஜீவரக்ஷாபிரசார சபையாரின் பிரசாரத்தின் பயனாக பலியின் கொடுமைகளை கேட்ட ஜனங்கள் ஷெடி ஆடு கோழிகளை பலியிடாமல் பாற்பொங்க விட்டதுமன்றி இனி பலியிடுவதில்லை என்றும் பலி பிரார்த்தனை பிரார்த்திப்பதில்லை என்றும் வாக்குறுதி செய்தார்கள். உற்சவம் மிக சிறப்பாகவும் உற்சாகமாகவும் நடந்தேறின.

தீண்டாமை யொழியும் வழி.

விழுப்புரம் கோவிந்தராஜலு நாயுடு அவர்களே தென்னிந்தியாவில் தீண்டாமையை ஒழிக்க அரியதொண்டு புரிந்து வருகிறார். பிரதிதினமும் நூற்றுக்கணக்கான ஏழை மக்கட்டு கஞ்சி வார்க்கிறார். ஆதிதிராவிட பாடசாலையை ஆதரித்து வருவதல்லாமல் ஒருவேளை கஞ்சியும் அளித்துவருகிறார். சில ஆதிதிராவிட பிள்ளைகள் மேல்வகுப்பில் வாசித்து தேர்ச்சியுற பொருளுதவியும் செய்துவருகிறார். காங்கிரஸ்காரர்களும் ஜஸ்டிஸ்காரர்களும் வானளாவி தீண்டாமையைப்பற்றி கூக்குரலிட்டு ஜெயபேரிகை கொட்டுகிறார்களேயொழிய நமது தென்னாட்டு திலகமாய் விளங்கும் கண்டிராக்டர் நாயுடு அவர்களைப்போல இந்த ஜில்லாவிலும் வேறு ஜில்லாவிலும் பதின்மராவது உண்டா? போகட்டும் இருவராவது உண்டா? அந்தோ! அந்தோ! இந்நாட்டு மக்கள் மந்திர உபதேசம் செய்வதில் வல்லுனரேயொழிய மக்களுக்கு உதவுவதில் வல்லார்களில்லை என்பது காணக்கிடக்கின்றது.

சமாச்சாரத் திரட்டு.

கல்மழை:— மொரடாபாத்திற்கு சமீபத்திலுள்ள சிட்னி கிராமத்தில் 1 மணிநேரம் பந்து பெரிய கல்மழைகள் பெய்ததினுல் வயல் வெளிகளில் பல ஆடுகள் இறந்தன மரங்களின் பல கிளைகளும் இலைகளும் உதிர்ந்தன.

*   *   *

மதமாற்றம்:— மகாத்மா காந்தியாரின் மூத்த குமாரர் ஹிராலால் காந்தி பம்பாயில் முஸ்லீம் மதத்தை தழுவிவிட்டார். 5000 முஸ்லீம்கள் அதுபோது சந்தோஷம் கொண்டாடினுர்கள்

*   *   *

நரபலி;— ஜார்னி என்ற இடத்தில் ஓர் குடியானவன் சாமிக்கு நரபலி செய்வதாய் வேண்டிக்கோண்டு ஒரு சிருவனை தந்திரமாய் காட்டுக்கு அழைதது போய் சாமிக் கெதிரில் பலியிட்டான். அவனைப் பற்றி கேஸ் விசாரணையிலிருக்கிறது.

*   *   *

அபிசீனியா தோல்வி:— அபிசீனியாவில் இத்தாலி பிரவேசித்து சுமார் 6 மாதகாலம் கடும்போர் செய்து விஷவாயுவை பிரயோகித்ததின் பயனுய் அபிசீனியா தோல்வியடைந்தது இத்தாலி அபிசீனியா இராஜ்ஜியத்தின் பெரும் பகுதியை கைப்பற்றிக்கொண்டது மறுபடியும் அபிசீனியா யுத்தம் செய்து தன் நாடுகளை கைப்பற்றிக்கொள்ள யோஜித்துக் கொண்டிருக்கிறது.

*   *   *

யுத்த முயற்சி:— ஜர்மனியில் புதிய முறையில் யுத்த தளவாடங்கள் நாளுக்கு நாள் அதிகரிக்கப்பட்டு வருகின்றன.

*   *   *

ஆகாய விமானம்.— சுமார் 10 வருஷத்திற்கு முன்பு 7000 ஆகாய விமானங்களிருந்தன 1935 வருஷத்தில் 16000 இருந்தன அடுத்த வருஷத்திற்குள் 22000 ஆகிவிடுமென அமெரிக்கா செய்தி எட்டுகிறது.

*   *   *

பனைமரம்:— ராமநாதபுரம் ஜில்லாவைச்சேர்ந்த திருப்பத்தூருக்கு கிழக்கே ஓர் ஊரில் 9 கிளையுள்ள பனைமரம் இருந்து வருகிறதாம். (விடுதலை)

*   *   *

விசித்திர மீன்:— சையாம் தேசத்தில் 1 மணி நேரத்தில் 300 அடி நடக்கும் ஓர் விசித்திர மீன் இருப்பதாக மீன்இலாகா உதவி கமிஷனர் தெரிவிக்கிறார். (விடுதலை)

*   *   *

Registered No. M. 3552.

சமரசம்.

சந்தாதாரர்களுக்கு ஓர் ஞாபகம்.

1936-௵த்திற்காக வசூலிக்கும் ரூ 1—4—0 ஒரு வருட சந்தாவுக்கு ஆரம்பத்தை முன்னிட்டு 1937-௵ டிசம்பர்-௴ வரையில் இரண்டு வருஷத்திற்கு பத்திரிகை யனுப்பப்படும். பல உத்தமர்கள் ஆயுள் சந்தா கொடுத்துதவுவதாய் கையொப்ப மிட்டிருப்பதால் பத்திரிகை இனி தாமதமின்றி நடக்குமென்பது நற்குறியாகும். கையொப்பமிட்ட சந்தாதாரர்கள் வி. பி. சிலவின்றி தபாலில் மணியார்டர் செய்யகோருகிறோம்.

பத்திரிகையின் எஜெண்டுகள் கொஞ்சம் முயற்சி யெடுத்துக் கொண்டால் பத்திரிகையின் முன்னேற்றத்திற்கு சாதகமாயிருக்கும்.

தற்கால சந்தாதாரர்கள் ஒவ்வொருவரும் பெரு முயற்சியினால் தங்களது நண்பர்களையும் சந்தாதாரர்களாக சேர்த்து ஆதரிக்கக் கோருகிறோம்.

ஆபீஸ் மானேஜரிடம் செலுத்தும் சந்தாதாரர்கள் 5 வருட சந்தா துகையாக ரூபாய் 5ம் நேரில் செலுத்தி ரசீது பெற்றுக்கொள்ளவும்

பத்திரிகாலயம் போஸ்டல் ரூல்படி விழுப்புரத்திற்கே மாற்றப் பட்டிருக்கிறது. சகல தபால்களும் கீழ்கண்ட விலாசத்திற்கு அனுப்ப கோருகிறேன்.

இப்பொழுது கொஞ்சம் தாமதமாய் வந்தபோதிலும் இனி தாமத மேற்படாமல் ஒழுங்காய் வருவதற்கேற்ற சாதனங்கள் துரிதத்தில் நடக்கின்றது. எதிர்பாராத விதமாய் விழுப்புரத்தில் ஓர் உபகாரி 2 வருஷத்திற்கு வேண்டிய காகிதச்சிலவை எற்றுக்கொண்டு அடுத்த மாதத்தில் ஸ்டாக் செய்வதாக வாக்களித்துள்ளார்.

சந்தா துகை செலுத்துவோர் 5 சந்தா துகையை ஒரேதடவையில் சேர்த்துமணியார்டர் செய்வதால் மணியார்டர் கமிஷன் குறைவுபடு மென்பது தெரிந்துக்கொள்ளவும்.

மானேஜர்,

சமரஸம் ஆபீஸ், லாலி பில்டிங்,
பாண்டிரோட், விழுப்புரம்.